# அரசு ஆதரவாளருக்கு தாராள ஆயுத விநியோகம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 29 இதழ் 86
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12 — 05 — 1993

## சிறிமா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு சார்பான அங் கத்தவர்களுக்கு இரகசியமாக ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சி தலைவியும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் பச்சைப் புலிகளால் கிழக்கில் ஆள் கடத்தல்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள மன்னம்பிட்டிப்பகுதி யில் சிறிலங்கா அரசின் இரக சிய குழு ஒன்றினால் ஆட் கடத்தல்கள் நடத்தப்படுகின் றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கொழும்பில் வெடிகுண்டுப் பீதி: பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் மீண்டும் வெடிகுண்டு சம்பவங்கள் இடம் பெறலாம் என்ற அச் சத்தைத்தொடர்ந்து நகரின் கேந்திரநிலையங்கள் மற்றும் பிரதான பகுதிகளில் பாது

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ வடபகுதி மீதான —

# பொருளாதாரத் தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## நான்கு நாட்களுக்குள் முடிவு தெரிவிப்பதாக ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

"கடந்த சில வருடங்களாக வடபகுதியில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

திரு. விஜயதுங்கா புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நேற்றுக்காலை 10-30 மணியளவில் அவரைச் சந் தித்த மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பராராஜசிங்கத் திடமே அவர் இவ்வாறு கூறி னார்.

வடபகுதி மீதான பொரு ளாதாரத்தடை நீக்குமாறு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலாளர்கள் மாற்றம் செய்யப்பட்டனர்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தனது செயலா ளர்களில் மாற்றம் செய்துள் ளார். புதிய ஜனாதிபதியின் பத்திரிகை செயலாளராக திரு. ஹரல்ட் பீரிஸ் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு ஹரல்ட் பீரிஸ் முன்னர் திரு. விஜயதுங்கா பிரதம ராகவும் அமைச்சராகவும் பணிபுரிந்தபோது அவரது சிரேஷ்ட உதவிச் செயலாள ராக கடமையாற்றினார்.

இதுவரை ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளராக பணியாற்றிய திரு இவன் கூரே வெளிவிவகார அமைச்சு க்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். திரு. இவன் கூரே மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் பத்திரிகைச் செயலாளர் என்பது குறிப் பிடத்தக்கது.

(நி)

## "அரசியலில் ஈடுபடமாட்டேன்; அரசுக்கு ஆலோசனை கூறுவேன்"

### ஜே. ஆர். அறிவிப்பு

(கொழும்பு)

"அரசியலில் ஒருபோதும் ஈடுபட மாட்டேன். ஆனால் தற்போதைய அரசுக்கு வேண்டிய ஆலோசனை களை வழங்குவேன்". இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கொழும்பு பத்திரிகை ஒன் றிற்கு வழங்கிய பேட்டியொன் றில் தெரிவித்துள்ளார்.

"தற்போதைய அரசு என்னை அழைத்தாலும் நான் அரசியலில் எந்த ஒரு பொறுப் பையும் ஏற்க மாட்டேன்" என்றும் அவர் கூறினார்.

திரு. பிரேமதாசா, திரு அத்துலத்முதலி ஆகியோரின் மறைவின் பின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த் தன அரசியலில் ஈடுபடுவார். என்ற ஊகம்பற்றி அவரிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ சர்வதேச கண்காணிப்பு குழுவை சிறிமா சந்தித்தார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறி மாவோ பண்டாரநாயக்கா வும் அவரது பிரதிநிதிகள் குழு வும் மாகாண சபைத்தேர்தலை கண்காணிக்க வந்துள்ள சர் வதேச கண்காணிப்புக் குழுவை நேற்று சந்தித்தனர்.

எதிர்வரும் 17-ம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தல் எந்தவித முறைகேடும் இல்லாது நடப் பது பற்றி ஆராய சம்பந் தப்பட்ட கண்காணிப்புக்குழு வுக்கு என்னென்ன ஆலோ சனைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளும் நோக்குடனேயே திருமதி பண்டாரநாயக்கா அவர்களை சந்தித்ததாக தெரிவிக்கப்பட் டது.

(இ)

## ஆசிரியர்களின் சேவை நிபந்தனைகள் நீக்கப்பட்டது

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு விதிக்கப் பட்டிருந்த சேவை நிபந்தனை கள் நீக்கப்பட்டுள்ளன. இது உடனடியாக அமுலுக்கு வரு மென ஜனாதிபதி டி. பி. விஜே துங்க அறிவித்ததாக தெரி விக்கப்பட்டது.

ஆசிரியர்களின் நலன் கருதி மேலும் பல தீர்மானங்கள் அரசாங்கத்தால் எடுக்கப்பட் டிருக்கிறது.

ஆசிரியர்களுக்கு விதிக்கப் பட்டிருந்த சேவை நிபந்தனை கள் ரத்துச்செய்யப்பட்டதன் காரணமாக நாட்டின் எந்தப் பகுதிகளிலும் சேவையாற்றும் வாய்ப்பு அவர்களுக்குக்கிடைத் துள்ளது.

ஆசிரியர் நியமனம் சம்பந்த மான நிபந்தனைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பயிலுனர் ஆசிரியர்களுக்கு அரசின் இந்த முடிவு பொருந் தும் என அறிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைத் தேர்தலில் சட்டம், ஒழுங்கைப் பேண அதிகாரிகளுக்கு பணிப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் 17-ம் திகதி திங் கட்கிழமை திட்டமிட்டபடி மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும், இப் பொழுதிருந்தே சட்டத்தை யும், ஒழுங்கையும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் உறு திப்படுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு முன் அனை வரும் சமம். இதற்கு முரணாக நடந்துகொள்ளும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் எச்சரித்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவுவோர் விபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப்புலி களுக்கு உதவி வழங்குவோர் ஆதரவாளர்கள், புலிகளிடம் அவிப்போர் விபரங்கள் புல னாய்வு துறையினரால் எடுக் கப்பட்டு வருவதாக தெரிவிக் கப்பட்டது.

இவர்கள் விரைவில் கைது செய்யப்படலாம் என்றும் இதற்கான ஏற்பாடுகள் தற் போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகி றது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் இவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு குற்றவாளியென நிரு பிக்கப்பட்டால் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட லாம் என்று தெரிய வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறை யினர் அறிவித்துள்ளனர்.

## தேர்தலில் வெற்றி பெற 3 கட்சிகள் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சியே வெற்றியீட்டும் என இத்தேர் தலில் போட்டியிடும் மூன்று முக்கிய கட்சிகளும் தெரிவித் துள்ளன.

மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதி ரான வாக்குகளே அதிகமாக உள்ளன என்று ஸ்ரீலங்காசுதந் திரக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [இ-4072]

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 16-05-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக்கொடுக்கப்படும். பதிவுசெய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-96)

### வகுப்புகள்

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5 தூர இட மாணவர்களுக்கு சனி, ஞாயிறு நாட்களில் புலமைப் பரிசில் Paper Class ஆரம்பமாயுள்ளது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-97)

### மணமகன் தேவை

யாழ். நகர் இந்து A/L சித்தியடைந்த பெண்ணுக்கு மணமகன் தேவை. வயது 24. உயரம் 5' 5'' ஆயிலியம் 3ம் பாதம் கிரகபாவம் 12/16, 4ல் செவ்வாய், பட்டதாரி, வங்கி, திணைக்களம், தனியார்துறையில் நல்ல பதவியில் இருப்போர், வெளிநாட்டில் பணியாற்றும் பட்டதாரி விரும்பத்தக்கது. சகல விபரங்களுடனும் சாதகக் குறிப்பையும் அனுப்பிவைக்கவும். விளம்பர இல. இ 98, மே/பா: ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ-98)

### காணவில்லை

என்பீல்ட் (Enfield) நீரிறைக்கும் இயந்திரம் 1240471/ A K 1018784 7-5-93 வெள்ளிக்கிழமை தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும். ப. மகேந்திரராசன் சங்குவேலி (இ-100)

## உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. -83

## குழாய்க் கிணறுகள்

(அரியாலை)

உப உணவு உற்பத்தி, சிறுதானியப் பயிர்ச்செய்கை ஆகியவற்றிற்காக பருத்தித்துறையைச்சேர்ந்த பெருபளவு மக்கள் தங்கள் தங்கள் வீடுகளில் குழாய்க்கிணறுகளை அமைத்துவருகின்றனர். -59

## உப்பள ஊழியர் சம்பளம்

(திருநெல்வேலி)

ஆனையிறவு உப்பளக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 1992ம் ஆண்டுக்கான சம்பளம் வழங்கப்பட உள்ளது.

சென்றவருட முழுச்சம்பளமும் ஒரேயடியாக வழங்க அரசு அனுமதிஅளித்துள்ளது. இதற்கானபணமும் காசோலை மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட உள்ளது. வங்கியில் கணக்கினை ஆரம்பித்து அதன் மூலம் அதில் வைப்புச் செய்யப்படும். பின்னர் அவர்கள் பணமாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (157)

## இராசி பலன்

12-05-1993

புதன்கிழமை

(தமிழுக்கு சித்திரை 29)

ஷஷ்டி காலை 6-43 வரை, உத்தராடம் காலை 7-29வரை, இராகு காலம் பகல் 11-54 முதல் 1-24 வரை, சுபநேரம் மாலை 4-24 முதல் 6-54 வரை, அமிர்தசித்தயோகம், நடேசர் அபிஷேகம்.

மேஷம்: பெரியோர் நட்பு, குடும்பமகிழ்ச்சி, தொழில் சிறப்பு

இடபம்: நடைக்கஷ்டம், வீண்பழி வேட்டல், அலைச்சல்.

மிதுனம்: வாக்குகலகம் பணக்கஷ்டம், மனவேதனை

கடகம்: சத்துருவெற்றி, பிரயாசமிகுதி, புதிய வாய்ப்புக்கள்.

சிம்மம்: அதிகாரிகள் பாராட்டு, காரிய சித்தி, தொழில் லாபம்.

கன்னி: சரீரபலக்குறைவு, பயணதுன்பம், மனச்சஞ்சலம்.

துலாம்: புத்திரர் கஷ்டம், காரியதடை, நிறமாற்றம்.

விருச்சிகம்: பணியாள் உதவி, போசன சுகம், வாக்கு வன்மை.

தனுசு: குடும்ப மனஸ்தாபம், தொழில் பாதிப்பு, மனக்கவலை.

மகரம்: பொருள் வரவு, இல்லற சிறப்பு, வெளியூர் செய்தி.

கும்பம்: இடையூறுகள், இனசனபகை, ஆவேச உணர்வு.

மீனம்: மனதியானம், பண வரவு, நண்பர் உதவி.

— ஜோஸியர்

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தக் கொடித்தினம் எதிர்வரும் 15ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இது சம்பந்தமான ஓர் ஆலோசனைக் கூட்டம் இன்று 12ம் திகதி பி.ப. 4-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத்தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும். (154)

0 0

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசேட கூட்டம் ஒன்று சுண்டுக்குளி சந்தியில் உள்ள பணிமனையில் தலைவர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் இன்று 12ம் திகதி பி. ப. 4 மணிக்கு நடைபெறும். (154)

0 0

(யாழ்ப்பாணம்)

செம்பியன்பற்றுப் பிரதேச சனசமூக நிலையங்களின் ஆதரவோடு, இன்று செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில், பி.ப. 3 மணி முதல் 6 மணி வரை ஆசிரியர் ஏ.டி. அரியரஞ்சன் தலைமையில் நடைபெறும் "சாவரம் இதழ் கருத்து நிகழ்வில் வண. ம. டேவிற் அடிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

0 0

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய ஸ்ரீமுக வருடப் பெருவிழா இன்று 12ம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

19ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 20ம் திகதி தேர்த் திருவிழாவும் 21ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் திருவூஞ்சல் விழா 22ம் திகதியும் நடைபெறவுள்ளது. (க)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவராக திரு. கு. பாலகிருஷ்ணன் அண்மையில் நடந்தேறிய கிளைக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இம் மாதம் 10ம் திகதி அவர் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திரு. பாலகிருஷ்ணன் வேலணைப் பிரிவின் ஒரு சிறந்த சமூகத்தொண்டராகவும் யாழ் செயலகத்தில் உயர் பதவி வகிப்பவராகவும் செயற்படுகின்றார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அறிவித்தல்

### வ. இ. ச. சபை

### அறிமுறைப் பரீட்சை - 1993

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக 1993-05-15, 1993-05-16 ஆகிய இரு தினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப்பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத்தலைவரும்.

(எ-3111)


## நன்றி நவில்கின்றோம்

07-05-93இல் இணுவை மக்களால் எடுக்கப்பட்ட எமது மணிவிழாவுக்கு அடிநாதமாகச் செயற்பட்ட மணிவிழா செயற்குழுவுக்கும், மணிவிழாமலரை மலர வைத்த பெரியார்களுக்கும், ஆசியுரைகள் செய்த சமயகுரவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும், யாழ். கல்வித் திணைக்கள கோட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் வீதிகள்தோறும் பூரணகும்பங்கள் ஏற்றி மலர்மாலைகள் சூட்டிக் கௌரவித்த அன்பர்களுக்கும் யாழ். மாவட்டத்தின் தூர இடங்களிலிருந்து மலர் மாலைகளுடனும் வாழ்த்து மடல்களுடனும் வருகை தந்து ஆசிகூறிய அன்புள்ளங்களுக்கும், தமிழ்மூலக் கல்வி மேம்பாட்டு சபையினருக்கும், மணிவிழா பற்றிய செய்திகளை பிரசுரித்த பத்திரிகை நிறுவனங்களுக்கும் விழாவை வனப்புடன் அமைத்து வெற்றிகண்ட இணுவைவாழ் மக்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

இரா. சுந்தரலிங்கம் குடும்பம்

(எ-3121)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரமலை தயாபரன்

(சுமந்திரன்)

(ஆனையிறவு - தட்டுவங்கொட்டி)

மண்ணகம்: 18-02-1972 விண்ணகம்: 23-04-1992 திதி: 12-05-1993

பெற்றோரும் உடன்பிறப்பும்
பாசத்தால் உணர்விழக்க
அற்பப் பதர்கள்
ஆக்கிய சதிச்செயலில்
உற்றாரை விட்டு
உடல்பிரிந்தாய் தயாபரா
வற்றவில்லை பாசம்
வளர்ந்தும் ஒரு வருடம்
நிற்கநின் பாதம்
நீவீ இறைவன் பாதமலர்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெற்றோரும் சகோதரங்களும்,
மைத்துனர் சிவனடியானும்.

கலைநகர்,
சித்தன்கேணி. (இ 95)

உ

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் மஹேசாந்

பிரானைவளவு சித்தன்கேணியைச் சேர்ந்த மஹே- சாந்தி தம்பதியினரின் அருமைப்புதல்வன் 'மஹேசாந்' இன்று (12-05-93) ஜேர்மனியில் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவர் சகலகலைகளையும் கற்று சீரும், சிறப்புடன் பல்லாண்டு வாழ, அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், பேரவளவுப் பிள்ளையார் அருள் வேண்டி வாழ்த்துகின்றனர்.

திருமதி மாரிமுத்து குடும்பத்தினர்.

பிரானைவளவு,
சித்தன்கேணி. (இ 66)

# "கொழும்பிலிருந்து யாழ். செல்ல அன்று 5 நாள் எடுத்தது இன்றும் அதே நிலைதான்"

## — அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

"அக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியை ஸ்தாபித்த கலாநிதி டானியேல் பூவர் ஐந்துநாள் பயணம் செய்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றடைந்தார். இப்போதும் அதே நிலைமை தான் இருக்கிறது. யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மக்களுக்கு பெரும் தொண்டாற்றி இருக்கிறது என்பதை எவருமே மறுக்க முடியாது."

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் திருமதி டெறசீற்று ஷேவர் குறிப்பிட்டார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள "ஹொலிடே இன்" விடுதியில்நடைபெற்ற இக் கூட்டத்திற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமைவகித்தார்.

அமெரிக்க தூதுவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது: சேர். வைத்திலிங்கம் துரைசாமி, திரு ஹண்டி பேரின்பநாயகம் போன்றோர்கள் சமுதாய நலனில் மிக அக்கறை கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். இப்படிப்பட்ட மாணவர் பரம்பரையை உருவாக்கவே யாழ்ப்பாணக் கல்லூரியினர் விரும்பினார்கள். யாழ்ப்பாணக் கல்லூரி என்ற நிறுவனம் தொடர்ந்தும் நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்றார்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க தூதுவர் யாழ்ப்பாண கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ் ஜெபநேசன் தமது தலைமை உரையின்போது அமெரிக்கன் மிஷனரிமார் 1823ம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் ஆசியாவிலேயே முதன் முதலாக பல்கலைக்கழக கல்லூரியை ஸ்தாபித்து இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டனர் என்றும் அத்துடன் உடுவில் மகளிர் கல்லூரி போன்ற பெண்களுக்கான பாடசாலைகளை நிறுவி பெண் கல்வியை ஊக்குவித்தனர் என்றும் கூறினார். (72)

## மண்டபம் முகாமில் — 6,400 தமிழ் அகதிகளையும் வரிசையாக நிறுத்தி சோதனை

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் மண்டபம் முகாமில் நித்திரையில் ஆழ்ந்திருந்த போது எழுப்பப்பட்டு பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இந்த முகாமை முற்றுகையிட்ட 200க்கும் மேற்பட்ட பொலிஸார் அதிகாலை 4 மணியளவில் அகதிகளை எழுப்பி பலத்த சோதனையிட்டனர்.

இங்குள்ள 6,400 தமிழ் அகதிகளையும் வரிசையாக நிறுத்தி பொலிசார் சோதனை நடத்தினர். இவர்களின் அடையாள அட்டைகளும், தஸ்தாவேஜுகளும் பொருட்களும் சோதனையிடப்பட்டன.

இச்சோதனை பலமணி நேரம் நடைபெற்றது. (ஒ)

## வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால்நடாத்தப்பட்ட 1993ம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் வலிகாமம் கோட்டத்திலே வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று 12ம் திகதி உரும்பிராய் சைவத் தமிழ்வித்தியாசாலையில் இரவு 7.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் க. வேங்கையன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திருக்குமரன் மங்கள விளக்கேற்றிவைக்கவுள்ளார். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வலிகாமம் கோட்ட தளபதி இளங்குமரன் வழங்கவுள்ளார்.

## முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சங்க நிர்வாக சபைக்கூட்டமும், 'நஷ்ட ஈடு கோரலும்' சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெறும்.

## புகைபிடிக்காத தினமாக மே 13 பிரகடனம்

(ஜெனிவா)

மே 13ம் திகதியை புகைப்பிடிக்காத தினமாகஅனுசரிக்க உலக சுகாதார நிறுவனம் தீர்மானித்துள்ளது.

உலக நாடுகளில் அமைந்துள்ள ஐ. நா. சபை அலுவலகங்களில் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளினுள் சிகரட், சுருட்டு போன்ற புகையிலைப் பொருட்கள் விற்கப்படுவதையும், பயன்படுத்தப்படுவதையும் ஐ. நா. சபை தடைசெய்ய வேண்டுமென கோரி உலக சுகாதார நிறுவனம் ஐ நா. சபையிடம் கோரிக்கைவிடவுள்ளது.

1,500 பணியாளர்களை கொண்ட உலக சுகாதார நிறுவனத்தின் ஜெனிவா தலைமையகத்தில் 1988ம் ஆண்டிலிருந்து எவருமே புகைப்பிடிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி.

## லாபத்தில் பங்கு

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் மக்கள் மயப்படுத்தப்பட்டபின்பு 4000 வெளிக்கள உத்தியோகஸ்தர்களுக்கு லாபத்தில் 5 வீத பங்கை வழங்கவிருப்பதாக அதன் தலைவர் திரு. கே. சண்முகலிங்கம் அறிவித்துள்ளார். (59)

## ஈக்குவடோரில் நிலச்சரிவில் சிக்கி 250 பேர் உயிரிழப்பு

(லண்டன்)

ஈக்குவடோரில் தங்கச் சுரங்கத் தொழிலாளர் வாழும் குடியிருப்பில் கனத்த மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 250பேர்பலியாகியுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

மிகக் கடும் மழையினாலும் நிலச்சரிவாலும் 200க்கும் மேற்பட்ட வீடுகளும் மண்ணில் புதையுண்டுபோய்விட்டன.

மீட்புப்பணியாளர்கள் இறந்தவர்களின் சடலங்களை மண் சரிவிற்குள் இருந்து மீட்டு வருகிறார்கள். தொடர்ந்தும் பெருமழை பெய்வதாலும் மீட்புப்பணி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைமேலும் அதிகரிக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## அ.தி.மு.க.விலிருந்து விலகினர்

(சென்னை)

தமிழக முன்னாள் அமைச்சர் திரு. ப. வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். கே. இராஜமாணிக்கம் ஆகியோர் அ. தி. மு. கவிலிருந்து விலகி எம். ஜி. ஆர். அ. தி. மு.க.வில் சேர்ந்துள்ளனர்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா திராவிட இயக்க கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக குற்றம் சாட்டிய இவர்கள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியில் எவ்வித வளர்ச்சிப் பணிகளும் ஏற்படுத்தப்படாததாலேயே தாம் அ. தி. மு. கவிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளனர். (க)

## வன்செயல், விபத்துக்களால் 35 லட்சம் மக்கள் வருடந்தோறும் பலி

(ஜெனிவா)

வன்செயல்கள், விபத்துக்களால் வருடம் ஒன்றிற்கு உலகில் 35 லட்சம் மக்கள் இறப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

தற்கொலைகள், கொலைகள் பாலியல் வன்முறை, கோஷ்டி சண்டை ஆகியவற்றால் பத்துலட்சம் பேர் இறக்கின்றனர்.

மிகுதி 25 லட்சம் பேரும் வீதி விபத்திலும், வேலைத்தளங்களிலும், விளையாட்டு திடல்களிலும் நடைபெறும் விபத்துக்களினால் இறக்கின்றனர்

இவ்வாறான உயிரிழப்பை கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் பல திட்டங்களை தயாரித்து வருகிறது. (சி)

## உலகத் தமிழர் குரல் சஞ்சிகை வெளிவந்தது

(கொழும்புத்துறை)

"உலகத் தமிழர் குரல்" 5-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டுச் சிட்னிச் சிறப்பிதழாக சிறப்பான முறையில் வெளிவந்து விட்டது.

சிட்னி மகாநாட்டுச்செய்திகள், கட்டுரைகள் அடங்கிய இப்பத்திரிகையை இல. 33 பருத்தித்துறை வீதியில் உள்ள இலங்கைக்கிளைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என இயக்க இலங்கைக்கிளை இணைச் செயலாளர் திரு. கி. கி. வரதராசா தெரிவித்துள்ளார். (154)

## தேர்தல் ஒத்திவைப்பு; பல கட்சிகள் கண்டனம்

(புதுடில்லி)

தமிழகத்தில் பழனி பேரூரில் ஒற்றப்பாளையம் ஆகியவற்றிற்கான இடைத் தேர்தல்களை தேர்தல் கமிஷன் ஒத்திவைத்ததை கண்டித்து ராஜ்ய சபாவில் எதிர்க்கட்சி உறுப்பினர் அனைவருமே ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

தேர்தல் கமிஷன் மேற்படி இரு தொகுதிகளுக்குமான இடைத்தேர்தலை ஒத்திவைத்தமையானது தன்னிச்சையான ஒரு செயல் என ஜனதாதள் (எஸ்) கட்சி உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டினார்.

இது விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என லோக்சபா உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்தனர்.

பழனி மற்றும் ராணிப்பேட்டை தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு குறைவாக இருப்பதாலேயே இந்திரா காங்கிரஸ்கட்சி தேர்தலை இரத்து செய்வதற்கு ஏற்பாடு செய்ததாக அ. தி. மு. க. உறுப்பினர் பி. வி நாராயணன் குற்றம் சாட்டினார். (க-வி)

## கல்விஅமைச்சு அதிகாரிகள் பாடசாலைக்கு விஜயம்

(திருநெல்வேலி)

வட-கிழக்கு கல்வியமைச்சின் உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து வருகின்றார்கள்.

அண்மையில் திருகோணமலையிலிருந்து வருகைதந்த வட-கிழக்கு கல்வியமைச்சின் செயலாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தலைமையிலான குழுவினர் இவ்வாறு பாடசாலைகளுக்கு விஜயத்தைமேற்கொண்டு வருகின்றார்கள்

இவர்கள் பாடசாலைகளின் தேவைகள், குறைபாடுகள், செயற்பாடுகளை கவனித்து வருகிறார்கள். அண்மையில் சில பாடசாலைகளுக்கு இவர்கள்சென்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (157-கி)

## தொற்றுநோய் வேகமாகப் பரவுகிறது

(கொழும்புத்துறை)

கொடூர வெய்யில் காரணமாக யாழ். மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல், சின்னமுத்து, அம்மைநோய், பொக்கிளிப்பான், நெருப்புக்காய்ச்சல் கண்நோய் போன்ற நோய்கள் பரவிவருகின்றன.

சிறுபிள்ளைகளுக்குறூமற்றிக் பீவர் (ஒரு வித வாதநோய்) ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நோய்கள் கூடுதலாக வடமராட்சி, கொழும்புத்துறை, மணியம்தோட்டம், சுதுமலை, ஆனைக்கோட்டை, தென்மராட்சி பகுதியில் பரவி வருகிறது. -154-சி

## ஓவியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்குரிய பாடசாலை மாணவர்களுக்கான ஆக்க ஓவியப்போட்டி மே 14ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00மணி முதல் கோத்தணி மூலாதாரப் பாடசாலைகளில் நடைபெறும். கோட்டங்களுக்குப் பொறுப்பான சித்திரபாட சேவைக்கால ஆலோசகர்கள் இணைப்பாளர்களாகக் கடமை புரிவர்.

உரிய சித்திரத்தாள், வர்ணச்சாதனம் ஆகியவற்றை மாணவர்கள் கொண்டுவருதல் வேண்டுமென கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (கி)

## சம்பள கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கான பங்குனி மாதத்திற்குரிய சம்பளம் இன்று 12ம் திகதி புதன்கிழமை சுன்னாகத்திலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து காசோலையாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ★ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச அமைப்புக்களின் ஆலோசனை பெறவேண்டும்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைகளை புதிய ஜனாதிபதி பெறவேண்டும் என அரசியல் சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இதுவரை காலமும் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காமல் போய்விட்டதால் பொஸ்னியா நெருக்கடி, கம்போடியா போன்ற பிரச்சினைகளில் ஐ.நா.போன்ற சர்வதேச அமைப்புகளின் அரசியல் ஆலோசனைகள் பெறப்பட்டிருப்பது போல இலங்கை இனப்பிரச்சினையிலும் சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைகளைப் பெற முயற்சிப்பது வரவேற்கத்தக்கது.

இனநெருக்கடியில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினருடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் வாய்ப்பைக் கொண்டுள்ள சர்வதேச அமைப்புகளின் அரசியல் ஆலோசனைகளை இனப்பிரச்சினை தீர்விற்காக நாடுவது நல்லதென்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி)

# தொடரும் யுத்தத்திற்கு அரசும், சிங்களக் கட்சிகளும் பதில் சொல்லவேண்டும்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு அரசாங்கக் கட்சியும் மற்றும் சிங்கள அரசியல் கட்சிகளும் பதில் சொல்லவேண்டும் என ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே ஈ. பி. ஆர். எல் எவ். மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தற்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும், முன்பு ஆட்சியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வடக்குக்கிழக்கில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்மக்களின் நியாயபூர்வ துன்ப துயரங்களுக்குப் பதிலளிக்கும் தெளிவான சிந்தனையும் அரசியல் உறுதியும் இந்தக் கட்சிகளுக்குக் கிடையாது. (இ)

## அரசியலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது: அரசியலில் பங்குபற்றாவிடினும் அரசுக்கு ஆலோசனை வழங்க எவ்வேளையும் தயாராகவுள்ளேன். டி. பி. விஜேதுங்காவுக்கும் உதவுவேன்.

எனக்கு வயது 86 ஆகிறது. நல்ல தேக ஆரோக்கியமும் இப்போது இல்லை.

மேலும் தற்போது ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்களாக இருப்பதை விரும்பினும் 4 வருடங்களாக மாற்றி தேர்தலையும் நடத்தலாம் என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (கே - ரி)

# ★ பம்பலப்பிட்டி லொட்ஜ் ஒன்றில் பொலிஸ் என கூறி தமிழரிடம் பணம், நகைகள் கொள்ளை

(கொழும்பு)

பொலிசார் எனத் தம்மை அறிமுகப்படுத்தி பம்பலப்பிட்டியிலுள்ள லொட்ஜ் ஒன்றுக்குள் சென்றவர்கள் அங்கிருந்த தமிழர்களிடமிருந்து 6 லட்சம் ரூபா ரொக்கப்பணமும், மற்றும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை பம்பலப்பிட்டிப்பகுதியிலுள்ள லொட்ஜ் ஒன்றுக்குள் சிவில் உடையில் வந்த ஐந்து பேர் தம்மை பொலிசாரென அறிமுகப்படுத்தியபின் தாம் சோதனையிட வந்ததாகக்கூறி அங்கு தங்கியிருந்த தமிழர்களிடம் 6 லட்சம் ரூபா ரொக்கப்பணத்தையும் மற்றும் தங்க நகைகளையும் கொள்ளையடித்துக்கொண்டுசென்றுவிட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (வி-ரி)

## வீரச் சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் இயக்க போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்துள்ளார்.

கப்டன் அகிலன் (ஆறுமுகம் சுவஞானம் - அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவராவார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி சாரணர் குழுவின் பவளவிழாவும் மலர் வெளியீடும் இன்று காலை 9-00 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார்.

# ஜனாதிபதியுடன் பலியான இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

(கொழும்பு)

கொழும்பில் மேதினத்தன்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் பலியான 24 பேரில், இருவரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லையென்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி குண்டு வெடிப்பில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா உட்பட 24பேர் பலியானார்கள். இவர்களில் இருவரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லையென்றும், இந்த இருவருக்கும் கொலையாளிக்கும் தொடர்பு இருக்கலாமென தாம் சந்தேகப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வி-ரி)

## அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து அவர் ஜனாதிபதியின் கவனத்துக் கொண்டு வந்துள்ளார்.

பொலிஸாரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கட்சி பேதமின்றி சேவை செய்வதை உறுதிப்படுத்துமாறும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசைக் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக கடிதம் ஒன்றை அவர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுவது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தும் அது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-ரி)

## அமிர் கொலை வழக்கு இன்று தீர்ப்பு

(கொழும்பு)

தமிழர் கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

## புதிய பொலிஸ் சுப்பிரெண்டன்

(கொழும்பு)

சி. ஐ. டி. பிரதிப்பணிப்பாளர் புஞ்சிபண்டா செனிவிரத்ன புதிய பொலிஸ் சுப்பிரெண்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சி. ஐ. டி. இலாகாவில் இவர் 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியுள்ளார். (பி)

## தகுதிகாண் பரீட்சை

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் வழங்குவதற்கான தகுதிகாண் பரீட்சை யூலை 24-ம் திகதி நடாத்தப்படவுள்ளது. (சி)

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நகருக்குள் வரும் வாகனங்கள் மீது கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தேகத்திற்கிடமான வீடுகளில் தேடுதல் மற்றும் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர் மீதும் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகர்ப்பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர் பற்றி உடனடியாக தமக்கு தகவல்களை வழங்குமாறு பாதுகாப்பு படையினர் பொதுமக்களை கேட்டுள்ளனர். (ரி)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள தமிழர்களை பழிவாங்கும் நோக்குடன் மேற்குறித்த விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு உதவியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே பல தமிழ் வர்த்தகர்கள் மீது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. (ரி)

## கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று மாலை 6-45 மணியளவில் கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். (ரி)

## மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

இதேவேளை மாகாண சபை தேர்தலை அவதானிக்கவென 8 நாடுகளைச் சேர்ந்த 20 அவதானிகள் வந்து சேர்ந்துள்ளனர் மேலும் பலர் இன்று வரவுள்ளனர்.

இன்று முதல் தேர்தல் முடியும் வரை 17 மாவட்டங்களிலும் இவர்கள் தங்கியிருப்பர்.

தேர்தல் நடைபெற்ற முறை பற்றி அறிக்கை சமர்ப்பித்தபின் வரும் 22-ம் திகதி அவர்கள் தத்தமது நாடுகளுக்குத் திரும்புவர். (கே-ரி)

## ஆசிரியர்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1992 லும் அதற்குப் பின்னரும் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் ஒரு வருடசேவையை இவ்வாண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப்பின் பூர்த்தி செய்திருப்பின் அவர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும்.

தற்போது ஆறுயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர்.

ஆசிரியர் தொழிலிலிருந்து கொண்டே, படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இவ்வாண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்தால் அவர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி குறைந்த பட்சம் ஒரு வருட கால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்கும் பதில் அதிபர்களை அந்தந்தப் பாடசாலைகளின் தரத்திற்கேற்ப நிரந்தரமாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

## தீ விபத்தில் 200 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தீவிபத்தில் இருநூறு பேர் பலியானார்கள். பலர் எரிகாயங்களுக்குள்ளானார்கள்.

இறந்தவர்களில் பலர் இளம் பெண்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ரி)

## அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் ஆட்கடத்தல் சம்பவங்கள் அடிக்கடி நடத்தப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசினால் வளர்க்கப்படும் பச்சைப்புலிகள் என்ற குழுவே இந்த ஆட்கடத்தலில் ஈடுபடுகிறது. இக்குழு கடந்த சனிக்கிழமை ஆசிரியர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளது. மன்னம்பிட்டியைச் சேர்ந்த செல்வக்குமார் பத்மநாதன் என்ற ஆசிரியரே பச்சைப்புலிக்குழுவினால் கடத்தப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் மன்னம்பிட்டியில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் அங்குள்ள மக்களைத் தாக்கித் துன்புறுத்தியுமுள்ளனர்.

மன்னம்பிட்டியிலுள்ள சொறிகல் என்ற இடத்தை அதிகாலை சுற்றி வளைத்த இராணுவத்தினர் இராஜதுரை ஜீவரத்தினம் என்ற புலிகளின் ஆதரவாளரையே சுட்டுக் கொன்றனர் (ரி)

## வடபகுதி மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- "வடபகுதி மீதான பொருளாதாரத்தடை நீக்கம் பற்றி பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசித்துவிட்டு நான்கு நாட்களுக்குள் இது பற்றி முடிவெடுப்பேன், என்றும் அவர் கூறினார். 1990ம் ஆண்டு முதல் வடபகுதியில் பொருளாதார தடை அமுல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது சிறைகளில் எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள 827 தமிழ் இளைஞர்களின் நிலைபற்றியும் இச்சந்திப்பின்போது தான் ஜனாதிபதியுடன் உரையாடியதாகவும் திரு. ஜோசப்பராஜசிங்கம் தெரிவித்தார். (கே-ரி)

## தேர்தலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் சிறிசேன கூரே தெரிவிக்கையில், நல்லமுறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பது எமது கட்சியே இந்தத் தேர்தலில் எமது கட்சி வெற்றி பெறுவதில் எந்தவித சந்தேகமும் கிடையாது என்றார்.

இதேவேளையில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஆகக்குறைந்தது மூன்று மாகாண சபைகளை வெற்றி கொண்டு கைப்பற்றிக்கொள்ளும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

## துப்பாக்கிச் சூடு ஷெல் தாக்குதல்

(எழுதுமட்டுவாள்)

ஆனையிறவு உப்பளப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவ முகாமை அண்டிய பகுதியில் நேற்று மாலை கடும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தது.

இதேவேளை கிளிநொச்சி பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளது. (170)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10336/B